DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.154/2022 | Deposition of Witness for : PW3 |
| Name : ராஜன் | Father/Husband Name : வேல் |
| Age : 56 | Village : செம்மண்குடியிருப்பு |
| Taluk : சாத்தான்குளம் | Calling : இரும்பு கடையில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 July 2026.
Accused absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது செம்மண் குடியிருப்பில் குடியிருந்து இரும்பு கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும் எனது ஊரைச் சார்ந்தவர் ஆவார். எதிரிகளை தெரியும் நாங்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் தற்போது நாங்கள் சமாதானமாக போய்விட்டோம். எங்களை சமாதானமாக போகும்படி யாரும் தூண்டவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. கடந்த 15.10.2021 ம் தேதி அ.சா.1 ஊரில் உள்ள அம்மன் கோவில் விளக்கு பூஜையின் போது அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே சிறிய பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 17.10.2021 அன்று காலை சுமார் 09.30 மணிக்கு அ.சா.1 ன் ஊர் தர்மகர்த்தா சித்திரை மகன் முருகன் சொன்னதாக சுடலைமணி வந்து அ.சா.1 இடம் சொன்னதாக கோவிலுக்கு செல்லக்கூடாது, கோவிலுக்கு வெளியே தான் இருக்க வேண்டும் என்று சொன்னார்களா என்றால் அது எனக்கு தெரியாது. பின்னர் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் தனியாக இருக்கும் போது எதிரிகள் கையில் கம்பு, அருவாளுடன் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து அ.சா.1 ஐ பார்த்து ஏய் நொண்டி தேவடியா, மலட்டு முண்ட, வெளியூர்காரி என்று ஆபாசமாக திட்டினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் அ.சா.1 ஐ கம்பாலும், காலாலும் என்னை மாறி, மாறி அடித்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கின் சம்பவத்ததை பற்றி போலீசாரிடம் உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.16 19:18:02 +0530

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.16 19:18:10 +0530

Judicial Magistrate, Sathankulam.